www.Padasalai.Net www.TrbTnpsc.com

12 R

Reg. No.

# அரையாண்டுத் தேர்வு - 2023

## தமிழ்

நேரம் : 3.00 மணி மதிப்பெண்கள் : 9

பகுதி - I

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக 14 x 1 = 14

1. சிற்பி பாலசுப்பிரமணியத்தின் 'இளந்தமிழே' பாடல் இடம்பெற்ற நூல்
அ) ஒளிப்பறவை ஆ) சூரிய நிழல் இ) நிலவுப்பூ ஈ) சர்ப்ப யாகம்
2. வெள்ளைச் சமவெளிகள் அழியக் காரணம்
அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல் இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடிநீர் உறிஞ்சப்படுதல்
3. தொடர்பிலக்கிய இலக்கண நூல்கள் தரும் கால எல்லை .............. ஆண்டுகள்
அ) மூன்று ஆ) இரண்டு இ) ஐந்து ஈ) ஆறு
4. "காவிரியை கடவோ கருக்கிலேமை கலப்பை" இத்தொடரில் 'கலப்பை' உணர்த்தும் பொருள்
அ) போர்க்கருவி ஆ) தச்சுக்கருவி இ) இசைக்கருவி ஈ) வேளாண்கருவி
5. "விளியறி ஞமலி குரைப்ப" ஞமலி என்ற சொல்லின் பொருள் அ) நாய் ஆ) குதிரை இ) எருது ஈ) ஆடு
6. திரைப்படத்தில் கதையும் சொல்லலாம் எனக் கண்டுபிடித்தவர்
அ) தாமஸ் ஆல்வா எடிசன் ஆ) லூமியர் சகோதரர்கள் இ) ஜார்ஜ் மெலி ஈ) சார்லி சாப்ளின்
7. பொருத்துக
அ) ஆமந்திரிகை - 1. பட்டத்துயானை
ஆ) அரசஉவா - 2. மூங்கில்
இ) கழஞ்சு - 3. இடக்கைவாத்தியம்
ஈ) கழை - 4. எடை அளவு
அ) 3142 ஆ) 4213 இ) 1234 ஈ) 4321
8. மெய்ப்பாடு எத்தனை வகைப்படும்? அ) ஐந்து ஆ) ஆறு இ) ஏழு ஈ) எட்டு
9. அதிசய மலரின் புன்னகையைப் பிடித்தவாறு தமிழ்நதி கடக்கச் சொல்வது
அ) கடந்தகாலத் துயரங்களை ஆ) ஆட்களற்ற பொழுதை இ) பசுமையை இழந்த நிலத்தை ஈ) அனைத்தையும்
10. பசும்பூண் பாண்டியன் தன்கொடியில் யானைச் சின்னத்தைக் கொண்டிருந்தான் எனக் கூறும் நூல்
அ) புறநானூறு ஆ) அகநானூறு இ) பதிற்றுப்பத்து ஈ) பட்டினப்பாலை
11. சத சற்குணரின் உரையைக் கேட்டுத் தூண்டப்பெற்ற மயிலை சீனி. வேங்கடசாமி எழுதிய நூல்
அ) பௌத்தமும் தமிழும் ஆ) இசுலாமும் தமிழும் இ) சமணமும் தமிழும் ஈ) கிறித்தவமும் தமிழும்
12. 'கொடைமழை' - கதை உணர்த்தும் பண்பு
அ) பசிப்பிணி போக்குதல் ஆ) மனிதநேயம் இ) இரத்ததானம் செய்தல் ஈ) வள்ளல் தன்மை
13. காப்பியத்திற்கு வழங்கும் வேறுபெயர் அ) கதைச்செய்யுள் ஆ) இலம்பகம் இ) சருக்கம் ஈ) படலம்
14. வெண்பாவிற்குரிய அந்தந்த சீரைத் தொடர்ந்துவரும் வெண்டளை ........................... (காய்கிறது / ஒளிர்கிறது)

பகுதி II

பிரிவு - 1

எவையேனும் மூன்றனுக்கு விடை தருக 3 x 2 = 6

15. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?
16. அரசரோடு நட்புப் பாராட்டினாலும் செய்யத்தகாதன யாவை?
17. விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு ஒடுங்கியதாக நக்கீரர் கூறுகிறார்?
18. வயலுக்குள் யானை தனித்துப் புகுந்தால் ஏற்படும் விளைவு யாது?

பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 2 = 4

19. பகைமைக்குரிய வாயில்கள் யாவை?
20. அக்காலத்துக் கல்விமுறையில் மனப்பயிற்சிக்கு உதவிய நூல்கள் யாவை?
21. பருவத்தே பயிர்செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.

பிரிவு - 3

எவையேனும் ஏழனுக்கு விடை தருக 7 x 2 = 14

22. கலை, அளை, அழை - மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
23. தொடரிலுள்ள மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக
அ) வனவிலங்குக் காப்பகத்தில் சிங்கக் குட்டியும் மான்குட்டியும் கண்டேன்
ஆ) குமரன் சோறு தின்று பழம் உண்டு பால் சாப்பிட்டான்
24. குதிரை, வேகம், ஓடு, தாவு - நான்கு சொற்களைக் கொண்டு தொடர் அமைக்க
25. தொடரிலுள்ள பிழைநீக்கி எழுதுக
அ) ரங்கன் வெங்கலப் பாத்திரக்கடை வைத்திருக்கிறார்
ஆ) காலையில் பூத்த மல்லிகை மணம் வீசியது



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

12158

26. உயர்திணைப் பன்மைப் பெயர்கள், பன்மை விகுதி பெறுமாறு இரண்டு தொடர்களை எழுதுக.

27. வல்லின மெய்யை இட்டும் நீக்கியும் எழுதுக

ஆசிரியருக்கு கீழ்படிதல் என்னும் குணம், உண்மையானவற்றை தெரிந்துக் கொண்டு, அறியாமையினை அகற்றி பல நல்லவைவற்றை கற்று கொடுக்கும்.

28. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக அ) தந்தனன் ஆ) நினைக்கின்ற

29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக அ) செம்பரிதி ஆ) பூம்பாவாய்

30. தமிழ்ப்படுத்துக அ) Folder ஆ) Metro Train

## பகுதி – III

### பிரிவு – I

ஏவையேனும் இரண்டனுக்கு விடை தருக 2 x 4 = 8

31. சடாயுவைத் தந்தையாக ஏற்று இராமன் ஆற்றிய கடமையை எழுதுக.

32. எங்கிருந்தோ வருகிறது
வண்ணத்துப் பூச்சியொன்று
பறவைகளும் வரக்கூடும் நாளை - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

33. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' - இத்தொடரின்வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

34. 'செம்பரிதி மலைமேட்டில் தலையைச் சாய்ப்பான் செந்நிறத்துப் பூக்காடாம் வானமெல்லாம், தொடர் வெளிப்படுத்தும் காட்சிநயத்தை விளக்குக.

### பிரிவு – 2

2 x 4 = 8

35. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் பணிகள் யாவை?

36. மணலில் எழுதியது முதல் தற்காலம் வரை எழுதும் முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைத் தொகுத்துரைக்க.

37. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்களின் தொடக்ககால ஆய்வுகளைக் குறிப்பிடுக.

38. திரைப்படத்தில் காட்சியின் ஆற்றலை எடுத்துக்காட்டுடன் புலப்படுத்துக.

### பிரிவு – 3

39. நெய்தல் திணை (அல்லது) செவியறிவுறூஉ துறையைச் சான்றுடன் விளக்குக. 3 x 4 = 12

40. தொழில் உவமையணி (அல்லது) நிரல்நிறையணியைச் சான்றுடன் விளக்குக.

41. இலக்கியநயம் பாராட்டுக

(தொடைநயம், அணிநயம், சுவைநயம், சந்தநயம், மையக்கருத்து இவற்றில் ஏவையேனும் மூன்று எழுதுக)

அந்தியிருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான் கண்டேன், திசைகள் கண்டேன்
பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை யெல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
இந்தாஎன் றேஇயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்தரித்த வண்ணந் தானோ?

- பாரதிதாசன்

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

அ) கூடிவாழ்ந்தால் கோடி நன்மை ஆ) யானைக்கும் அடி சறுக்கும்

43. தமிழாக்கம் தருக

Popular as the 'cultural capital' of India. Tamil Nadu is extremely well-known for its marvelous temples and other architectural gems. The State rose to prominence primarily because of its well-known and outstanding Tanjore paintings that flourished at the time of chola dynasty in ancient Tanjavoor.

## பகுதி – IV

3 x 6 = 18

44. அ) அறிவுடைமை வாழ்வின் உயர்வுக்குத் துணை நிற்கும் என்பதை வள்ளுவம் வழி நின்று நிறுவுக (அல்லது)

ஆ) நெடுநல்வாடையில் நக்கீரர் காட்டும் மழைக்கால வருணனையைச் சொல்லில் வடிக்க.

45. அ) கவிதையின் நடையைக் கட்டமைக்கும் அழகியல் கூறுகளை எடுத்துக்காட்டி விளக்குக (அல்லது)

ஆ) நிர்வாக மேலாண்மை குறித்து வெ. இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

46. அ) கோடைமழை கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக (அல்லது)

ஆ) "கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இதுகுறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

## பகுதி – IV

அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக 4 + 2 = 6

47. அ) "ஒருமையுடன்....." எனத் தொடங்கும் தெய்வமணிமாலை பாடலை அடிபிறழாமல் எழுதுக.

ஆ) "மிகும்" என முடியும் குறள்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com